**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.16/2026 - PW-2**

| | |
|---|---|
| Name | திருமதி.செல்வி (எ) சோபா |
| Husband/Father Name | திலீப்குமார் |
| Village /Area | அம்மனூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | இல்லதரசி |
| Age | 30 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 01.06.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த திலீப்குமார் என்னடைய கணவர் ஆவார். அ.சா.1 நதியா என் கணவரின் அக்கா ஆவார். நானும் எனது கணவர் திலீப்குமாரும் காதலித்து திருமணம் செய்து கொண்டோம். திருமணத்தின் வாயிலாக ஒரு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. கருந்து வேறுபாட்டின் காரணமாக சம்பவத்தின் முன்பு 7 மாத காலமாக பிரிந்து வாழ்ந்து வந்தோம். குழந்தைகள் என்னுடன் தான் எனது தாயார் வீட்டில் வசித்து வந்தார்கள். எனது கணவர் அவரது அம்மா வீட்டில் வசித்து கொண்டு ஆட்டோ ஓட்டும் தொழிலை செய்து வந்தார். 01.09.2025 அன்று காலை என் குழந்தைகளை அழைத்து கொண்டு என் வீட்டுக்கு வந்தார். எப்போதுமே சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் குழந்தைகளை அவர் வீட்டுக்கு அழைத்து சென்று மறுபடியும் திங்கள் கிழமை காலை அழைத்து வந்து விடுவது வழக்கம். 01.09.2025 அன்று தான் நான் என் கணவரை கடைசியாக பார்த்தேன். மறுபடியும் வருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றவர் திரும்பி வரவில்லை. அன்று மாலை சுமார் 6 மணியளவில் என் கணவரின் அக்கா நதியா எனக்கு போன் செய்து என் கணவரை பற்றி கேட்டார். நான் அவரிடம் காலை அவர் வந்துவிட்டு சென்றதை பற்றி கூறினேன். மேலும் 04.09.2025 அன்று என்னிடம் என் கணவர் காணாமல் போனது குறித்து புகார் கொடுக்க போவதாக எனது நாத்தனார் நதியா என்னிடம் கூறினார். அதற்கு நான் கொடுக்குமாறு சொன்னேன். 05.09.2025 அன்று போலீசார் என்னை காவல் நிலையத்தில் விசாரித்து ஓச்சலம் கிராமத்திலுள்ள கிணற்றில் ஒரு பிணம் மிதந்து கொண்டிருந்ததாகவும் என்னை அடையாளம் காண்பிக்குமாறு கூறி

என்னுடன் எனது அம்மாவையும் சம்பவ இடத்துக்கு அழைத்து சென்றார்கள். அங்கு நான் சென்று எனது கணவர் அணிந்திருந்த கருப்பு நிற முழுக்கை சட்டையையும் சாம்பல் நிற பேன்ட்டையும், பச்சை நிற டிக் போட்ட Ash கலர் shoe வையும், வலது கை தோல்பட்டையில் பச்சை குத்தியும் இடது கையில் என்னுடைய பெயரை 'S' என்று பச்சை குத்தியும் கழுத்தில் அவர் அணிந்திருந்த கருப்பு கலர் கயிற்றில் சிறிய மோதிரம் கட்டி தொங்கவிடப்பட்டிருந்ததையும் வைத்து கிணற்றில் இறந்து கிடந்த சடலம் என் கணவர் தான் என்று நான் அடையாளம் காண்பித்தேன். என் கணவருடைய முகம் அழுகிய நிலையில் இருந்தது. முகத்தில் கல்லை தூக்கி போட்டு நசுக்கப்பட்டிருந்தது. இடுப்பில் இரண்டு கற்கள் கட்டியிருந்தது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கு சொத்தான காணி கற்களால் தான் எனது கணவருடைய உடலுடன் கட்டப்பட்டு இருந்தது. அவைகள் ஏற்கனவே **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் தேங்காய் நார் கயிற்றால் தான் என் கணவரின் உடலுடன் காணி கற்கள் கட்டபட்டிருந்தது. அது ஏற்கனவே **சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கருப்பு, மஞ்சள் மற்றும் Grey நிறம் கலந்த shoe–களை தான் எனது கணவர் அணிந்திருந்தார். அது **சா.பொ.4** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் சாம்பல் நிற பேன்ட்டை தான் என் கணவர் அணிந்திருந்தார். அது ஏற்கனவே **சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கருப்பு நிற முழுக்கை சட்டையை தான் என் கணவர் அணிந்திருந்தார். அது ஏற்கனவே **சா.பொ.6** ஆக குறியீடு செய்யப்ப்டுள்ளது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் Samsung Galaxy phone என் கணவருக்கு சொந்தமானது தான். அதன் நிறம் வெளீர் மஞ்சள் நிறம் கொண்டது. அது ஏற்கனவே **சா.பொ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.06.01 17:22:29 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.